Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No STC.NO. 362/2022
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 1 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. பிரியா | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. கோட்டீஸ்வரன் | தொழில் | இல்லத்தரசி |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | 45 |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 04th day November of 2025.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

புசா.1 **திருமதி. பிரியா முதல் விசாரணை.-** (எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை)

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். இல்லத்தரசியாக உள்ளேன். எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் படித்து பாரத்துதான் கையொப்பம் செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணையின் ஒரு அங்கமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

குற்றம் சாட்டப்பட்டவர் எனக்கு கொடுத்த 01.01.2022 தேதியிட்ட ரூ.10,00,000/– க்கான கரூர் வைசியா வங்கி, திருப்பத்தூர் கிளை காசோலை எண்.000106 அசல் தாக்கல் செய்கிறேன் (அந்த ஆவணம் என்னால் **பு.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) மேற்படி காசோலைக்கான 09.03.2022 ம் தேதியிட்ட இந்தியன் வங்கி ரிட்டன் மெமோ அசல் தாக்கல் செய்கிறேன் (அந்த ஆவணம் என்னால் **பு.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 14.03.2022 ம் தேதியில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் தாக்கல் செய்கிறேன் (அந்த ஆவணம் என்னால் **பு.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 15.03.2022ம் தேதியிட்ட எதிரி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்காக அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் தாக்கல்

செய்கிறேன். (அந்த ஆவணம் என்னால் **பு.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) புகார் படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோலுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கபடுகிறது.**